Registered Office
"Maithri"
132, Cathedral Road,
Chennai 600 086,
India.
CIN: L35999TN1936PLC002202

Tel: 91 44 2811 2472
URL:www.ranegroup.com

# Rane Holdings Limited

**//Online Submission//**

RHL/SE/013/2024-25

May 16, 2024

| | |
|---|---|
| **BSE Limited**<br>Listing Centre<br>Scrip Code: **505800** | **National Stock Exchange of India Ltd.**<br>NEAPS<br>Symbol: **RANEHOLDIN** |

Dear Sir / Madam,

**Sub: Newspaper publication of Audited Financial Results – Regulation 47 of SEBI LODR**

We hereby enclose herewith the copies of newspaper publication on audited (standalone & consolidated) financial results of the Company for the quarter and year ended March 31, 2024 (AFR) published on May 16, 2024 in the newspapers, viz., 'Business Standard' (English) and 'Hindu Tamizh Thisai' (Regional language).

We request you to take the above on record and note the compliance under relevant provisions of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (SEBI LODR).

Thanking you.

Yours faithfully,

For **Rane Holdings Limited**

SIVA CHANDRASEKARAN
Digitally signed by SIVA CHANDRASEKARAN
Date: 2024.05.16 13:24:47 +05'30'

**Siva Chandrasekaran**
Secretary

Encl: a/a

Newspaper: Business Standard
Language: English
Edition: All Editions
Date of Publication:May 16, 2024

## RANE HOLDINGS LIMITED

CIN: L35999TN1936PLC002202
Regd. Office: "MAITHRI", 132, Cathedral Road, Chennai - 600 086. Visit us at: www.ranegroup.com

**Extract of audited consolidated financial results for the quarter and year ended March 31, 2024**

Rs. Lakhs

| S. No. | Particulars | Quarter Ended | | Year Ended | |
|---|---|---|---|---|---|
| | | March 31, 2024 | March 31, 2023 | March 31, 2024 | March 31, 2023 |
| | | Audited | Audited | Audited | Audited |
| 1. | Total Income | 87,442 | 94,821 | 3,54,398 | 3,53,746 |
| 2. | Net Profit / (Loss) for the period (before Tax and Exceptional items) | 5,209 | 1,452 | 18,477 | 15,614 |
| 3. | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional items) | 4,507 | 349 | 7,570 | 13,782 |
| 4. | Net Profit / (Loss) for the period after tax and Exceptional items | 3,841 | (806) | 14,961 | 8,731 |
| 5. | Total Comprehensive Income / (Loss) for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income / (Loss) (after tax)] | 3,241 | (1,067) | 15,229 | 7,064 |
| 6. | Equity Share Capital | 1,428 | 1,428 | 1,428 | 1,428 |
| 7. | Earnings Per Share (EPS) (Face Value - Rs. 10/- each) (not annualised for quarters and year to date periods) | | | | |
| | Basic (in Rs.) | 21.99 | (13.20) | 86.67 | 43.61 |
| | Diluted (in Rs.) | 21.99 | (13.20) | 86.67 | 43.61 |

The above is an extract of the detailed format of consolidated audited financial results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the standalone and consolidated financial results are available on the Stock Exchange websites: www.bseindia.com and www.nseindia.com and on the company's website-www.ranegroup.com

**Notes:**

1. The above financial results were reviewed and recommended by the Audit Committee and thereafter approved by the Board of Directors of Rane Holdings Limited ('the Company') at their respective meetings held on May 15, 2024.
2. Exceptional items in the above financial results includes the following:

a. In respect of, Rane t4u Private Limited (""Rt4u"") an erstwhile subsidiary company, the Company assessed the carrying value of its investments and considered the fair value changes thereto resulting in a reduction in the carrying value aggregating to Rs. 296 Lakhs for the year ended March 31, 2024; and Rs. 292 Lakhs for the quarter and year ended March 31, 2023 being shown as an exceptional charge in the audited standalone financial results.

The Company had sold its entire investment in Rt4u for a consideration of Rs. 850 Lakhs in exchange for allotment of 862,505 equity shares in eTrans Solutions Private Limited (""eTrans"") representing 11.94% stake in eTrans and Rt4u ceased to be a subsidiary of the Company effective July 19, 2023. The Group recorded an exceptional income of Rs. 338 Lakhs for the year ended March 31, 2024, on account of sale of Rt4u in the audited consolidated financial results.

b. Rane Engine Valve Limited ("REVL"), a subsidiary company incurred Voluntary Retirement Scheme ('VRS') expenditure of Rs. 9 Lakhs for the year ended March 31, 2024 and Rs. 48 Lakhs for the year ended March 31, 2023.

Further, REVL had incurred a provision for customer quality claims for Rs. 300 Lakhs for the quarter ended March 31, 2024, Rs. Nil for the quarter ended December 31, 2023, Rs. 199 Lakhs for the quarter ended March 31, 2023, Rs. 413 Lakhs for the year ended March 31, 2024 and Rs. 619 Lakhs for the year ended March 31, 2023 towards estimated product liability costs, in respect of certain valves supplied to overseas customers pending finalisation. REVL has initiated insurance claim in respect of the same, which is under process. The management is of the opinion that the provision carried as at March 31, 2024, is adequate to cover the estimated net liability.

c. As at March 31, 2023, on account of changes in market conditions and rising cost of capital, the Group had assessed the recoverable amount of the net assets of Rane Light Metal Castings Inc., ('LMCA') the erstwhile step-down subsidiary in the U.S , which represents a single cash generating unit (CGU). Based on such assessment, the Group had recorded an impairment charge of Rs. 904 Lakhs as an exceptional item in the audited consolidated financial results during the quarter and year ended March 31, 2023.

Pursuant to the approval of the Board of Directors and Shareholders of Rane (Madras) Limited ('RML'), Rane Madras International Holdings B.V. (the Company's step down subsidiary) had sold its entire stake in LMCA (RML's erstwhile step-down subsidiary) on September 14, 2023 for a consideration of USD 4.9 million. Accordingly, for the year ended March 31, 2024, the Group had recorded loss on sale of the aforesaid RML's erstwhile step down subsidiary aggregating to Rs. 8,546 Lakhs in the audited consolidated financial results as an exceptional item.

Consequent to the sale of LMCA, Rane Madras International Holdings B.V., had carried out a reduction of capital in the non-convertible redeemable preference shares issued to RML. RML had determined that it is eligible to claim the tax benefit arising from such losses and had accordingly recorded a deferred tax asset of Rs. 11,334 Lakhs in the year ended March 31, 2024. RML had also obtained legal advice on this matter and believes that it will have sufficient future taxable profits to fully utilize this deferred tax asset.

RML primarily incurred provision for one time warranty related costs and VRS expenditure of Rs. 1,875 Lakhs for the year ended March 31, 2024, and VRS expenditure of Rs. 261 Lakhs for the year ended March 31, 2023.

d. Rane Brake Lining Limited ('RBL'), REVL and RML have incurred an expense of INR 122 Lakhs, INR 120 Lakhs and INR 160 Lakhs respectively towards proposed scheme of amalgamation between and amongst group entities. The same has been disclosed as an exceptional item in the audited consolidated financial results for the quarter and year ended March 31, 2024.

3. The Board of Directors have recommended a dividend of Rs. 25 per equity share for the year ended March 31, 2024.
4. Key standalone financial information is given below

Rs. Lakhs

| S. No. | Particulars | Quarter Ended | | Year Ended | |
|---|---|---|---|---|---|
| | | March 31, 2024 | March 31, 2023 | March 31, 2024 | March 31, 2023 |
| | | Audited | Audited | Audited | Audited |
| 1. | Total Income | 2,746 | 2,544 | 15,047 | 11,819 |
| 2. | Profit Before Tax | 1,305 | 705 | 8,608 | 5,903 |
| 3. | Profit After Tax | 1,115 | 549 | 7,306 | 4,830 |
| 4. | Other Comprehensive Income | (553) | 120 | (730) | (24) |
| 5. | Total Comprehensive Income | 562 | 669 | 6,576 | 4,806 |

Place : Chennai
Date : May 15, 2024

For Rane Holdings Limited
L Ganesh
Chairman & Managing Director

## NURECA LIMITED

**Extract of Audited Financial Results for the Quarter and Year ended 31.03.2024 (INR million )**

| Sr. No. | Particulars | Standalone | | | Consolidated | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter Ended | | Year Ended | Quarter Ended | | Year Ended |
| | | 31-03-2024 (Audited) | 31-12-2023 (Unaudited) | 31-03-2024 (Audited) | 31-03-2024 (Audited) | 31-12-2023 (Unaudited) | 31-03-2024 (Audited) |
| 1 | Total Income from Operations | 195.63 | 223.74 | 945.21 | 169.70 | 223.74 | 919.28 |
| 2 | Net (Loss)/Profit for the period (before Tax; Exceptional and/or Extraordinary items) | (67.42) | 8.30 | (32.69) | (64.72) | 9.45 | (25.44) |
| 3 | Net (Loss)/Profit for the period before tax (after Exceptional and /or Extraordinary items) | (67.42) | 8.30 | (32.69) | (64.72) | 9.45 | (25.44) |
| 4 | Net (Loss)/Profit for the period after tax (after Exceptional and /or Extraordinary items) | (44.14) | 0.78 | (24.42) | (41.46) | 1.65 | (17.94) |
| 5 | Total Comprehensive (Loss)/ Income for the period [Comprising (Loss)/Profit for the period(after tax) and other Comprehensive Income/ (Loss) (after tax)] | (43.32) | 0.64 | (24.03) | (40.78) | 1.51 | (17.72) |
| 6 | Equity Share Capital | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet | | | 1,828.59 | | | 1,831.11 |
| 8 | Earnings Per Share (of Rs. 10/- each) (for continuing and discontinued operations) | | | | | | |
| | 1. Basic: | (4.41) | 0.08 | (2.44) | (4.15) | 0.16 | (1.79) |
| | 2. Diluted: | (4.41) | 0.08 | (2.44) | (4.15) | 0.16 | (1.79) |

**Note:**

1.The above is an extract of the detailed format of Quarterly and Year ended Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the financial results (including standalone results) are available on the Company's website i.e. https://www.nureca.com/investor-relations/ and on the website of the Stock Exchanges at www.bseindia.com and www.nseindia.com. The Board of Directors hereby declare that audit reports does not have any modified opinion.

By order of the Board of Directors
of Nureca Limited

Dated: 15.05.2024
Place: Chandigarh

Saurabh Goyal
Managing Director
DIN: 00136037

Regd. Office: Office Number 101, 1st Floor Udyog Bhavan Sonawala Lane, Goregaon E Mumbai City MH 400063
CIN: L24304MH2016PLC320868 Tel. +91-172-5292900, Email : cs@nureca.com, Website : www.nureca.com




## ITC Limited

Enduring Value

CIN : L16005WB1910PLC001985
Registered Office: Virginia House, 37 Jawaharlal Nehru Road, Kolkata 700 071
Tel: +91 33 2288 9371 • Fax: +91 33 2288 2358 • E-mail: isc@itc.in
Website: www.itcportal.com

**Transfer of Dividend and Ordinary Shares of the Company to the Investor Education and Protection Fund**

Members are hereby informed that unclaimed dividend for the financial year 2016-17 and the Ordinary Shares of the Company in respect of which dividend entitlements have remained unclaimed for seven consecutive years from the said financial year will be due for transfer to the Investor Education and Protection Fund of the Central Government (IEPF) on 2nd September, 2024, pursuant to the provisions of Section 124 of the Companies Act, 2013 read with the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016. The relevant details of such unclaimed dividend and the shares are available on the Company's corporate website at **http://info-dividend-shares.itcportal.com/popupi_new.aspx** and **http://info-dividend-shares.itcportal.com/popupiepf.aspx**, respectively. Individual letters in this regard have been sent to the concerned Members at their address registered with the Company / the Depository Participants.

Members are advised to lodge their claims in respect of the above by writing to the **Investor Service Centre (ISC), ITC Limited, 37 Jawaharlal Nehru Road, Kolkata 700 071** by **30th August, 2024** or sending e-mail at **isc@itc.in**. If no claim is received by ISC by that date, the Company, in accordance with the aforesaid provisions of law, shall transfer such dividend and shares to the IEPF.

Clarification on this matter, if required, may be sought from Mr. T. K. Ghosal, Head of ISC, by sending e-mail at the aforesaid e-mail ID or by calling at telephone nos. 1800-345-8152 (toll free) or 033-2288 6426 / 0034.

Dated: 15th May, 2024

ITC Limited
R. K. Singhi
Executive Vice President &
Company Secretary




## AUDITED CONSOLIDATED FINANCIAL RESULTS

(Rs in Crores)

| Particulars | Quarter Ended | | | Year Ended | |
|---|---|---|---|---|---|
| | 31.03.2024 Refer Note-2 | 31.12.2023 Unaudited | 31.03.2023 Refer Note-2 | 31.03.2024 Audited | 31.03.2023 Audited |
| Total Income from operations | 641 | 625 | 715 | 2,587 | 3,065 |
| Earning before Interest, Tax, Depreciation and Amortization (EBITDA) | 67 | 56 | 74 | 251 | 434 |
| Net Profit/(Loss) for the period (before tax, and/or exceptional items) | 18 | 10 | 35 | 72 | 304 |
| Net Profit/(Loss) for the period before tax (after exceptional items) | 18 | 10 | 35 | 72 | 304 |
| Net Profit/(Loss) from ordinary activities after tax | 15 | 11 | 32 | 62 | 244 |
| Total Comprehensive Income for the period [ Comprising Profit/(Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 17 | 11 | 28 | 59 | 246 |
| Equity Share Capital | 26 | 26 | 26 | 26 | 26 |
| Earnings Per Share (of Rs 10 each) (not annualised) | | | | | |
| - Basic: | 5.9 | 4.4 | 12.0 | 24.0 | 90.9 |
| - Diluted: | 5.9 | 4.3 | 11.8 | 23.6 | 89.5 |

**Notes:**

1. The Board of Directors had recommended dividend of Rs. 3 per equity share for the financial year FY 23-24 subject to approval of shareholders in annual general meeting
2. The above audited financial results were reviewed by the Audit Committee and approved by the Board of Directors on 15th May 2024. The figures for the quarter ended 31st March 2024 and 31st March 2023 are the balancing figures between audited figures in respect of full financial year and published year to date figures upto third quarter of years ended 31st March 2024 and 31st March 2023 respectively which were subjected to limited review.
3. The above is an extract of the detailed format of Quarterly Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Financial Results are available on the Stock Exchange websites (www.bseindia.com and www.nseindia.com) and on Company's website (www.cosmofirst.com)
4. Key numbers of Standalone financial results are as given below. The standalone financial results are available at Company's website.

| Particulars | Quarter Ended | | | Year Ended | |
|---|---|---|---|---|---|
| | 31.03.2024 Refer Note-2 | 31.12.2023 Unaudited | 31.03.2023 Refer Note-2 | 31.03.2024 Audited | 31.03.2023 Audited |
| Income from operations | 604 | 568 | 601 | 2,391 | 2,742 |
| Profit/(Loss) from ordinary activities before tax | 3 | 2 | 25 | 43 | 275 |
| Profit/(Loss) from ordinary activities after tax | 3 | 3 | 21 | 39 | 214 |

New Delhi
15th May 2024

ASHOK JAIPURIA
CHAIRMAN & MANAGING DIRECTOR

**COSMO FIRST LIMITED**
(Formerly Cosmo Films Limited)

Regd. Off: 1st Floor, Uppal's Plaza, M-6, District Centre, Jasola, New Delhi - 110025 CIN: L92114DL1976PLC008355,
Tel: 011-49494949, Fax: 011-49494950,
E-mail: investor.relations@cosmofirst.com, Website: www.cosmofirst.com

"Celebrating 42 years of Cosmo First is not just a testament to our longevity but also a reflection of the trust we've built with our employees, community, clients, and partners. Trust has been the cornerstone of our journey since our inception, and we will continue to ensure that we always uphold the trust placed in us in everything we do."

Ashok Jaipuria

OUR BUSINESSES: COSMO FILMS Engineered to Enhance | COSMO PLASTECH | COSMO SUNSHIELD | COSMO SPECIALITY CHEMICALS | Zigly For Happy Pets

## BALU FORGE INDUSTRIES LIMITED

**(FORMERLY KNOWN AS AMAZE ENTERTECH LIMITED)**

CIN: L29100MH1989PLC255933
506, 5th Floor, Imperial Palace, 45 Telly Park Road, Andheri (East), Mumbai, Maharashtra, 400069
Email Id: compliance@baluindustries.com website : www.baluindustries.com

**Extract of Consolidated Audited Financial Results For the Quarter & Year ended 31st March 2024.**

| Sr. No. | Particulars | Consolidated (Amount in Lakhs) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Quarter Ended | | | Year Ended | |
| | | 31-03-2024 Audited | 31-12-2023 Unaudited | 31-03-2023 Audited | 31-03-2024 Audited | 31-03-2023 Audited |
| 1 | Total Income from Operations | 16,555.38 | 14,893.90 | 12,432.93 | 57027.05 | 33928.48 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items#) | 3,461.39 | 3,020.12 | 1,726.72 | 11,348.30 | 5,056.53 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary items#) | 3,461.39 | 3,020.12 | 1,726.72 | 11,384.30 | 5,056.53 |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items#) | 2,827.88 | 2,545.47 | 1,523.84 | 9,367.34 | 3,891.29 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit /(Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 2,827.85 | 2,542.10 | 1,527.56 | 9,370.06 | 3,900.25 |
| 6 | Equity Share Capital | 10,259.19 | 10,259.19 | 8,336.49 | 10,259.19 | 8,336.49 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year. | | | | | |
| 8 | Earnings Per Share (for continuing and discontinued operations) - | | | | | |
| | 1. Basic: | 2.76 | 2.58 | 1.83 | 9.80 | 4.67 |
| | 2. Diluted: | 2.74 | 2.57 | 1.83 | 9.74 | 4.67 |
| **Notes:1 Additional Information on Standalone Financial Results Pursuants to Reg. 47(1)(b)** | | | | | | |
| 1 | Total Income from Operations | 11,702.52 | 10,574.03 | 8,368.01 | 39,870.98 | 28,186.51 |
| 2 | Net Profit / (Loss) for the period before tax | 2,706.22 | 2,342.45 | 1,361.56 | 8,731.96 | 4,364.67 |
| 3 | Net Profit / (Loss) for the period after tax | 2,072.21 | 1,867.79 | 1,158.68 | 6,714.50 | 3,199.43 |

Note: a) The above is an extract of the detailed format of Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly and yearly Results are available on the websites of the Stock Exchange(s) and the listed entity viz www.bseindia.com and www.baluindustries.com.

For Balu Forge Industries Limited
(Formerly Known as Amaze Entertech Limited)
Sd/-
Jaspalsingh Chandock
Managing Director
DIN 00813218

Place: Mumbai
Date : 14th May, 2024

## MEGA FLEX PLASTICS LIMITED

CIN: L25209WB2003PLC097273
Registered Office: 4, Ho Chi Minh Sarani, Kolkata – 700 071 Tel.: +91 33 4029 3494;
Email: info@megaflex.in; Website: www.megaflex.co.in

**NOTICE OF POSTAL BALLOT AND REMOTE E-VOTING INFORMATION**

Members of Mega Flex Plastics Limited ("Company") are hereby informed that, pursuant to Sections 108 and 110 of the Companies Act, 2013 ("the Act") read with Rules 20 and 22 of the Companies (Management and Administration) Rules, 2014 ("the Rules"), Regulation 44 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("SEBI Listing Regulations"), the Secretarial Standard on General Meetings issued by The Institute of Company Secretaries of India (SS-2) and other applicable laws and regulations including any statutory modification(s) or re-enactment(s) thereof for the time being in force and in accordance with relevant circulars issued by the Ministry of Corporate Affairs ("MCA") in regard to conducting postal ballot voting process through electronic means ("e-voting / remote e-voting"), the Company has dispatched the Postal Ballot Notice on Wednesday, May 15, 2024 through electronic mode only, to those Members whose names appear in the Register of Members / List of Beneficial Owners as on Friday, May 10, 2024 ("cut-off date") and whose email addresses are registered with the Company / Depositories, seeking approval of the Members of the Company for the following business item(s):

| Type of Resolution(s) | Resolution(s) |
|---|---|
| Ordinary | Approval for Increase in Authorised Share Capital and subsequent alteration in the Memorandum of Association of the Company |
| Special | Issuance of Warrants on a Preferential Basis and matters related therewith |
| Ordinary | Appointment of Mrs. Pragya Jhunjhunwala (DIN: 02315132), as an Independent Director of the Company |

In accordance with the MCA Circulars, the communication of the assent or dissent of the Members would only take place through the remote e-voting system. The Company is pleased to offer e-voting facility to its members to enable to cast their votes electronically. The Company has appointed National Securities Depository Limited (''NSDL") for facilitating e-voting facility. The voting rights of Members shall be in proportion to their shares of the paid-up equity share capital of the Company as on cut-off date i.e. May 10, 2024 and any person who is not a member as on that date should treat the Postal Ballot Notice for information purpose only.

The detailed procedure for e-voting is enumerated in the Postal Ballot Notice. The remote e-voting period commences on Thursday, May 16, 2024 at 09:00 a.m. (IST) and ends on Friday, June 14, 2024 at 05:00 p.m. (IST). The remote e-voting shall not be allowed beyond 05:00 p.m. (IST) on Friday, June 14, 2024, and the e-voting module shall be disabled by NSDL thereafter.

The Members whose email addresses are not registered with the Company / Depositories, to receive the Postal Ballot Notice may send their request at info@megaflex.in. The Postal Ballot Notice will be available on the website of the Company at www.megaflex.co.in and the website of NSDL at www.evoting.nsdl.com. This Notice can also be accessed from the website of the National Stock Exchange of India Limited ("NSE") on which equity shares of the Company are listed i.e., www.nseindia.com.

The Board of Directors of the Company has appointed Mr. Abbas Vithorawala, Practicing Company Secretary (Certificate of Practice No.: 8827) to act as the Scrutinizer to conduct the Postal Ballot process in a fair and transparent manner. The result of the postal ballot process will be announced within two (2) working days from the date of conclusion of remote e-voting. The Voting Result declared along with Scrutinizer's Report shall be placed on the website of the Company at www.megaflex.co.in and on the website of NSDL i.e., www.evoting.nsdl.com and communicated to NSE at www.nseindia.com.

In case of queries relating to e-voting, please refer the Frequently Asked Questions (FAQs) for shareholders and e-voting user manual for shareholders at the download section of www.evoting.nsdl.com or call on Contact No.: 022-48867000 or send a request to Mr. Amit Vishal, Deputy Vice President, NSDL or Ms. Pallavi Mhatre, Senior Manager, NSDL at evoting@nsdl.com.

For **MEGA FLEX PLASTICS LIMITED**
Sd/-
Parul Mantri
Company Secretary & Compliance Officer

Place: Kolkata
Date: May 15, 2024

TAMILTH Chennai 1 TNadu_01 J. JENIVAR SUJITH KUMAR 213429 HT221862

Newspaper: Hindu Tamizh Thisai
Language: Tamil
Edition: Tamil Nadu
Date of Publication:May 16, 2024



**பொன் மொழி:**

உங்கள் எதிர்காலத்தை உங்களால் மாற்ற முடியாது; ஆனால் உங்கள் பழக்கங்களை மாற்றலாம். அவை உங்கள் எதிர்காலத்தை மாற்றும்.

– ஏ.பி.ஜே. அப்துல் கலாம்

**இணையம்:** அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செயல்பாடுகளை ஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஊக்குவித்தல் பணிகளை மேற்கொள்வதற்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (https://dst.gov.in/) 1971–ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத்துறை சார்ந்த கொள்கைகளை வகுத்தல், ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் ஆய்வுகளை மேற்கொள்ள தேவையான ஒத்துழைப்பு, தேவையான நிதியுதவி வழங்குதல் போன்ற பணிகளிலும் ஈடுபடுகிறது.

**பொது அறிவு:** புயல்கள் பற்றிய முன்னெச்சரிக்கை செய்திகளை மக்கள் எளிதாகப் புரிந்துகொள்வதற்காக புயல்களுக்கு பெயரிடப்படுகின்றன. இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், இலங்கை, தாய்லாந்து, ஈரான், கத்தார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஏமன் ஆகிய 13 நாடுகள் பல்வேறு பெயர்களை பரிந்துரைக்கின்றன. இவை உலக வானிலை அமைப்பால் அரபிக் கடல், வங்காள விரிகுடாவில் ஏற்படும் புயல்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

### தமிழகத்தில் 19-ம் தேதி வரை கனமழைக்கு வாய்ப்பு

# முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க உத்தரவு

### 26 மாவட்ட ஆட்சியர்களுக்கு வருவாய் நிர்வாக ஆணையர் கடிதம்

**சென்னை**

மிக கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால், மழையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கன்னியாகுமரி, விருதுநகர் உள்ளிட்ட 26 மாவட்ட ஆட்சியர்களை வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் தற்போது பல்வேறு மாவட்டங்களில் கோடை வெயிலுக்கிடையில், மழை பரவலாக பெய்து வருகிறது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் திருவள்ளூர் உள்ளிட்ட வடமாவட்டங்களில் அவ்வப்போது சில இடங்களில் பெய்யும் மழை, தென் மாவட்டங்கள், மேற்கு மாவட்டங்களில் அனைத்து இடங்களிலும் பரவலாக பெய்து வருகிறது.

இதன் அடிப்படையில், தமிழக வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர் மழைக்கால முன்னெச்சரிக்கை எடுக்கும்படி ஆட்சியர்களை அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக தென்காசி, விருதுநகர், தேனி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, புதுக்கோட்டை, திண்டுக்கல், திருப்பத்தூர், கோயம்புத்தூர், நீலகிரி, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, நாமக்கல், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர் ஆகிய 26 மாவட்டங்களின் ஆட்சியர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், சென்னை வானிலை ஆய்வு மையம், கன மற்றும் மிக கனமழை எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே, மாவட்ட ஆட்சியர்கள் நிலையான வழிகாட்டுதல்களை பின்பற்றி, பேரிடரை கையாள வேண்டும். மாவட்ட நிர்வாகத்தை முழுமையாக செயல்படச் செய்து, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து கனமழையால் ஏற்படும் பிரச்சினைகளை கையாள வேண்டும்.

மேலும், மாவட்ட ஆட்சியர்கள் ஏதேனும் நிகழ்வுகள் இருந்தால் அதுகுறித்து உடனடியாக வருவாய் நிர்வாக ஆணையரின் கவனத்துக்கு கொண்டு வர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**வானிலை மையம் தகவல்**

இதனிடையே சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு இலங்கை கடலோரப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று முதல் 19-ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் இடி, மின்னல் மற்றும் மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்தில் பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 20, 21 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இன்று முதல் 19-ம் தேதி வரை வட தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் ஓரிரு இடங்களில் 102 டிகிரி ஃபாரன்ஹீட் அளவில் வெப்பம் இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இன்று குமரிக்கடல், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப்பகுதிகள், தெற்கு கேரள கடலோரப் பகுதிகள், தெற்கு இலங்கை கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் அப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது

### சொல்லாத திட்டங்களையும் முதல்வர் நிறைவேற்றியதால்

# முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது

### அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் பெருமிதம்

**சென்னை**

சொல்லாத புதிய திட்டங்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றியதால் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்று தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், 'சொன்னதைச் செய்வோம், சொல்லாததையும் செய்வோம்' என்று முழங்கி தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காக புதிய புதிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்ய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ்பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகளைப் பெற்றவர்களுக்கு வீடுகள் வழங்கும் 'கனவு இல்லம்' திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம், கரோனா கால கற்றல் இடைவெளியை ஈடுசெய்யும் நோக்கில் 'இல்லம் தேடிக் கல்வி' திட்டம், 'இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம்', 'நான் முதல்வன்' திட்டம், 'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டம், 'எண்ணும் எழுத்தும்' திட்டம் ஆகியவை செயல்பாட்டில் உள்ளன.

வரும் 2030-ம் ஆண்டுக்குள் தமிழக பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த 'முதலீட்டாளர்களின் முதல் முகவரி' திட்டம், "புதுமைப் பெண்' திட்டம், 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்', அரசுப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த சமூக அமைப்புகள், பெருந்தொழில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர் ஆகியோருடன் இணைந்து உருவாக்கப்பட்ட 'நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி' திட்டம் ஆகியவையும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், பள்ளிக் கட்டிடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கணினி அறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள், குடிநீர் வசதிகளை ஏற்படுத்தும் 'பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்', தமிழ் மரபின் வளமை, பண்பாட்டின் செழுமை, சமூக சமத்துவம், பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை கல்லூரி மாணவர்கள் மத்தியில் கொண்டு செல்ல 'மாபெரும் தமிழ்க் கனவு' திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதுதவிர, 'முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்', ஆதிதிராவிட இளைஞர்கள், மகளிரை தொழில் முதலாளியாக உயர்த்தும் 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்', 'நீங்கள் நலமா?' திட்டம், ஆண்டுக்கு ரூ.200 கோடி வீதம் 5 ஆண்டுகளில் ரூ.1000 கோடி செலவில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரும் 'அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்' செயல்படுத்தப்படுகின்றன.

இவ்வாறாக தமிழக முதல்வர், 'சொல்லியதை மட்டுமின்றி சொல்லாததையும் செய்வோம்' என்று கூறி நடைமுறைப்படுத்திய பல்வேறு சிறப்பான திட்டங்களால் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. மக்களின் வாழ்வாதாரமும் உயர்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



கடற்பரப்பில் ஏற்படும் எண்ணெய் கசிவை அகற்றுவது தொடர்பாக, இந்திய கடலோர காவல்படை சார்பில் மாசுக் கட்டுப்பாட்டு பயிற்சி சென்னை கடல்பகுதியில் நடைபெற்றது. கடலோர காவல்படையின் கிழக்கு மண்டலம் சார்பில் நடந்து வந்த இந்த பயிற்சி நேற்றுடன் நிறைவடைந்தது.

### எட்டாம் வகுப்பு பாட புத்தகத்தில்

# முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்த தகவல் சேர்ப்பு

**சென்னை**

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி பற்றிய குறிப்புகள் பள்ளிக்கல்வி பாடப்புத்தகத்தில் சேர்க்கப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார்.

அதன்படி கடந்த கல்வியாண்டில் 9-ம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் 'செம்மொழியான தமிழ் மொழி' எனும் தலைப்பில் தமிழ் மொழிக்கு கருணாநிதி ஆற்றிய பங்களிப்பு குறித்த விவரங்கள் இடம்பெற்றிருந்தன.

அதைத் தொடர்ந்து வரும் கல்வியாண்டிலும் (2024-25) 10-ம் வகுப்பு தமிழ் பாடநூலில் உரைநடைப் பகுதியில் 'பன்முகக் கலைஞர்' என்ற தலைப்பில் கருணாநிதியின் சிறப்பு திறன்கள் பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த தகவலை பள்ளிக்கல்வித் துறை ஏற்கெனவே அறிவித்திருந்தது.

அதேபோல், தற்போது 8-ம் வகுப்பு சமூக அறிவியல் பாடப்புத்தகத்திலும் கருணாநிதி பற்றிய குறிப்புகள் பாடத்தில் இடம்பெற்றுள்ளன. அதாவது, சமூக அறிவியல் குடிமையியல் பிரிவில், 'பெண் உரிமை சார்ந்த சட்டங்கள்' என்ற தலைப்பின்கீழ் வரும் பாடத்தில் கருணாநிதி பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

அதில் 'கூட்டுக் குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சொத்துரிமை வழங்குவதற்காக 1956 இந்து வாரிசு உரிமை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்ட முன்வரைவு 1989-ம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் தமிழகத்தில் இந்து கூட்டுக் குடும்பச் சொத்தில் பெண்களுக்கும் சமஉரிமை கிடைக்க வழிசெய்யப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### புதிய மின்இணைப்பு 3 நாளில் தர உத்தரவு

**சென்னை**

புதிதாக மின்இணைப்பு கோரி நுகர்வோர் விண்ணப்பிக்கும் இடத்தில் மின்மாற்றிகள் இல்லையென்றால் 90 நாட்களும், மின்கம்பங்கள் இல்லையென்றால் 60 நாட்களுக்குப் பிறகு மின்இணைப்பு வழங்கும்.

இந்நிலையில், மின்மாற்றி, பில்லர் பாக்ஸ், மின்கம்பம் ஆகியவை உள்ள இடங்களில் மின்இணைப்பு கோரி விண்ணப்பித்தால் 3 முதல் 7 நாட்களுக்குள் நுகர்வோருக்கு மின்இணைப்பு வழங்க அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் மின்வாரியம் உத்தரவிட்டுள்ளது.

### 320 நாட்களுக்கும் மேலாக சிறையில் உள்ள

# செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனு மீது இன்று மீண்டும் விசாரணை

### உடல்நிலையை கருத்தில் கொள்ளுமாறு வழக்கறிஞர் வாதம்

**புதுடெல்லி**

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்டத்தின் கீழ் 320 நாட்களுக்கும் மேலாக சிறையில் உள்ள முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் கோரும் வழக்கின் விசாரணையை உச்ச நீதிமன்றம் இன்றைக்கு தள்ளிவைத்துள்ளது. நேற்று நடந்த வழக்கறிஞர் வாதத்தில் செந்தில் பாலாஜியின் உடல் நிலையை கருத்தில் கொண்டு ஜாமீன் வழங்கும்படி கோரப்பட்டது.

அமலாக்கத் துறையால் கடந்தாண்டு ஜூன் 14 அன்று சட்டவிரோதப் பணப்பரிமாற்ற தடைச்சட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டார். அவருக்கு ஜாமீன் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் இந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அபய் எஸ்.ஓஹா, உஜ்ஜல் புயன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அமலாக்கத் துறை தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, ஒரு முக்கியமான வழக்கு மற்றொரு சிறப்பு அமர்வில் விசாரணைக்கு வருவதால் அதில் ஆஜராக வேண்டியுள்ளது. எனவே இந்த வழக்கு விசாரணையை விடுமுறைக்குப்பிறகு தள்ளி வைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.



அதற்கு ஆட்சேபம் தெரிவித்த செந்தில் பாலாஜி தரப்பு மூத்த வழக்கறிஞர் சி. ஆர்யமாசுந்தரம், 'மனுதாரர் ஏற்கெனவே 320 நாட்களுக்கும் மேலாக ஜாமீன் கிடைக்காமல் சிறையில் உள்ளார். எனவே இந்த வழக்கை நீண்ட காலத்துக்கு தள்ளி வைக்கக்கூடாது. இன்றோ அல்லது நாளைக்கோ விசாரிக்க வேண்டும்' என்றார்.

அப்போது துஷார் மேத்தா, இந்த வழக்கில் இங்கு எழுப்பப்பட்டுள்ள அனைத்து சாரம்சங்களும் ஏற்கெனவே உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப் பட்டவை. தற்போது இந்த மனுவை அவசர கதியில் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

அதையடுத்து ஆர்யமா சுந்தரம், இந்த வழக்கை தள்ளி வைக்க வேண்டும் என கோரினால், மனுதாரரான செந்தில் பாலாஜிக்கு அதுவரை இடைக்கால ஜாமீன் வழங்க வேண்டும். அவருக்கு ஏற்கெனவே பை-பாஸ் அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது. நீண்ட காலமாக ஜாமீன் கிடைக்காமல் சிறையில் இருந்து வருகிறார். அதைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், 320 நாட்களாக மனுதாரர் சிறையில் இருப்பதை ஒரு காரணமாக கூற முடியாது. இதுபோன்ற வழக்குகளில் கைதானவர்கள் 2 முதல் 3 ஆண்டுகளுக்கும் மேலாகக் கூட ஜாமீன் கிடைக்காமல் சிறைக்குள் இருந்து வருகின்றனர். மருத்துவ ரீதியிலான கோரிக்கைகள் மட்டும் கருத்தில் கொள்ளப்படும் என்றனர்.

அதற்கு அட்டர்னி ஜெனரல் துஷார் மேத்தா, மருத்துவ காரணம் காட்டி ஜாமீன் கோரியதை ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இந்த வழக்கின் தன்மை மற்றும் தீவிரம் காரணமாக செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் மறுக்கப்பட்டுள்ளது. எனவே தற்போதும் பழைய காரணங்களைக் கூறித்தான் ஜாமீன் கோருகின்றனர் என்பதால் இந்த மனுவையும் நிராகரிக்க வேண்டும் என்றார்.

அப்போது ஆர்யமாசுந்தரம், முன்னதாக உச்ச நீதிமன்றம் ஜாமீன் அளிக்க மறுத்தபோது செந்தில் பாலாஜிக்கு பை-பாஸ் அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை. ஆனால் அதன்பிறகு தற்போது அவருக்கு இதயத்தில் பை-பாஸ் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே அவரது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு உரிய சிகிச்சை மற்றும் தொடர் கவனிப்புக்காக ஜாமீன் அளிக்க வேண்டும் என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கு விசாரணையை இன்றைக்கு (மே 16) தள்ளி வைத்து உத்தரவிட்டனர்.

### கோயில் தேர் திருவிழாக்களின்போது

# அசம்பாவிதங்களை தடுக்க உரிய நடவடிக்கை

### தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

**சென்னை**

கோயில் தேர் திருவிழாக்களின் போது அசம்பாவித சம்பவங்களைத் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சேலத்தைச் சேர்ந்த ஏ.ராதாகிருஷ்ணன் சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 2022-ம் ஆண்டு தாக்கல் செய்திருந்த மனுவில், " தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் உள்ள காளியம்மன் கோயிலில், கடந்த 2022-ம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்த்திருவிழாவில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் எதிர்பாராத விதமாக தேர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பலர் காயமடைந்தனர். ஒருவர் பலியானார்.

தேபோல தமிழகத்தில் உள்ள முக்கிய கோயில்களில் நடைபெறும் தேர்த் திருவிழாக்களின்போதும் விபத்து ஏற்பட்டு உயிர்ப்பலி ஏற்பட்டு வருகிறது. இதுபோன்ற அசம்பாவிதங்களைத் தடுக்கும் வகையில் தேர் திருவிழாக்களின்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை கண்டிப்புடன் முறையாக பின்பற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும். விதிமுறைகளை பின்பற்றாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு அறிவுறுத்த வேண்டும், என கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி ஜெ. சத்யநாராயண பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தேர் திருவிழாக்களின் போது ஏற்படும் விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதைப்பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், கோயில் தேர் திருவிழாக்களை முறையாக நடத்த அரசு வகுத்துள்ள விதிகளை அனைத்து அதிகாரிகளும் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். குறிப்பாக தேர் திருவிழா நேரங்களில் இதுபோன்ற அசம்பாவித சம்பவங்கள் நிகழாமல் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தமிழக அரசுக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்துள்ளனர்.

### வெப்ப அலை அதிகரித்தால் திறந்தவெளி கட்டுமானப் பணிகளை தடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

**சென்னை**

வெப்ப அலை அதிகம் வீசினால் மட்டும், திறந்த வெளியில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டாம் என தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் அறிவுறுத்தியுள்ளது.

அதிக வெப்ப அலை வீசுவதால், சென்னை, மதுரை மாவட்டங்களில் காலை 10 முதல் மாலை 4 வரை திறந்தவெளி கட்டுமானப்பணிகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டாம் என தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அந்தந்த மாவட்ட மண்டல இணை இயக்குநர்களுக்கு சமீபத்தில் அறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக அனைத்து பகுதிகளிலும் வெப்பத்தின் தாக்கம் சற்று குறைந்து, கோடை மழை பெய்து வருகிறது. இதையடுத்து, வெப்பநிலை குறைந்துள்ளதால், திறந்த வெளியில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அனுமதியளிக்கலாம் என்றும், ஒருவேளை வெப்ப அலை அதிகரிக்குமானால் மீண்டும் கட்டுப்பாடுகளைவிதிக்கலாம் என்றும் மண்டல இணை இயக்குநர்களுக்கு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

Rane ரானே ஹோல்டிங்ஸ் லிமிடெட்
CIN: L35999TN1936PLC002202 | பதிவு அலுவலகம்: "மைத்ரி", 132, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086. Visit us at: www.ranegroup.com

மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்

ரூபாய் லட்சத்தில்

| வ. எண் | விவரங்கள் | காலாண்டிற்கான | | ஆண்டிற்கான | |
|---|---|---|---|---|---|
| | | மார்ச் 31, 2024 | மார்ச் 31, 2023 | மார்ச் 31, 2024 | மார்ச் 31, 2023 |
| | | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்பட்ட |
| 1. | இயக்கத்திலிருந்து மொத்த வருமானம் | 87,442 | 94,821 | 3,54,398 | 3,53,746 |
| 2. | இந்தக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு முன்) | 5,209 | 1,452 | 18,477 | 15,614 |
| 3. | இந்தக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) வரிக்கு முன் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்) | 4,507 | 349 | 7,570 | 13,782 |
| 4. | இந்தக்காலத்திற்கான நிகர லாபம் / நஷ்டம் வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு பின் | 3,841 | (806) | 14,961 | 8,731 |
| 5. | இந்தக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் / (நஷ்டம்) (இந்தக்காலத்திற்கான உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம்/நஷ்டம் (வரிக்கு பின்) | 3,241 | (1,067) | 15,229 | 7,064 |
| 6. | பங்கு மூலதனம் | 1,428 | 1,428 | 1,428 | 1,428 |
| 7. | பங்கு ஒன்றுக்கு வருமானம் (EPS) (முக மதிப்பு – ரூ.10/– வீதம்) (தொகை ரூபாயில்) (காலண்டுகள் மற்றும் ஆண்டு முதல் தேதி வரையிலான காலகட்டங்களுக்கு வருடாந்திரமல்ல) அடிப்படை: | 21.99 | (13.20) | 86.67 | 43.61 |
| | நீர்த்த மதிப்பு: | 21.99 | (13.20) | 86.67 | 43.61 |

மேலே உள்ளது 2015-ஆம் வருடத்திய SEBI அமைப்பின் ஒழுங்குமுறை விதிகளின், ஒழுங்குமுறை விதி 33-ன் கீழ் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) பங்குச்சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட, ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சாராம்சம் ஆகும். தனிப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் பங்குச்சந்தைகளின் இணையதளங்களான www.bseindia.com, www.nseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளமான www.ranegroup.com என்ற முகவரியில் கிடைக்கும்.

குறிப்புகள் :
1. மேலே உள்ள நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, ரானே ஹோல்டிங்ஸ் லிமிடெட் ('நிறுவனம்') இயக்குநர்கள் குழுவினால் மே 15, 2024 அன்று நடைபெற்ற அவர்களுடைய கூட்டங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவில் தரப்பட்டுள்ள விதிவிலக்கான பொருட்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:
a. ரானே t4u பிரைவேட் லிமிடெட் ('Rt4u') முந்தைய சப்சிடியரி நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், நிறுவனம் அதன் முதலீடுகளின் சுமந்து செல்லும் மதிப்பை மதிப்பிட்டு, அதன் நியாயமான மதிப்பு மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, இதன் விளைவாக குறையும் சுமந்து செல்லும் தொகையின் மொத்த மதிப்பு மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டில் ரூ. 296 லட்சம்; மற்றும் மார்ச் 31, 2023ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டில் ரூ. 292 லட்சம் தனித்த நிதி முடிவுகளில் விதிவிலக்கான கட்டணமாக காட்டப்பட்டுள்ளது.
ஜூலை 19, 2023 முதல் நிறுவனத்தின் சப்சிடியரி நிறுத்தப்பட்டதால், eTrans மற்றும் Rt4u-வில், 11.94% பங்குகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், eTrans சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு ("eTrans") ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 862,505 சமநிலைப் பங்குகளை, ரூ. 850 லட்சங்களுக்கு பரிமாற்றம் செய்யும் வகையில், Rt4u-வில் இருந்த முழு முதலீட்டையும் விற்பனை செய்துவிட்டது. Rt4u விற்பனை செய்ததின் விளைவாக, குழுமானது, தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளில், மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டில், மிதமிஞ்சிய வருமானமான ரூ. 338 லட்சங்களை பதிவு செய்துள்ளது.
b. ரானே என்ஜின் வால்வ் லிமிடெட் (REVL) ஒரு சப்சிடியரி நிறுவனமானது ஓய்வூதிய திட்டத்திற்கான செலவீனம் முறையே மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டில் ரூ. 9 லட்சம் மற்றும் மார்ச் 31, 2023ல் முடிவடைந்த ஆண்டில் ரூ. 48 லட்சம்.
மேலும் REVL ஒரு வெளிநாட்டு வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட சில வால்வுகள் இறுதி செய்யப்படுவதை பொறுத்தவரை, வாடிக்கையாளர் தர உரிமைகோரல்களுக்கு, மார்ச் 31, 2024ல் முடிவடைந்த காலாண்டில் ரூ. 300 லட்சம், டிசம்பர் 31, 2023ல் முடிவடைந்த காலாண்டில் ரூ. இல்லை, மார்ச் 31, 2023ல் முடிவடைந்த காலாண்டில் ரூ. 199 லட்சம், மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டில் ரூ. 413 லட்சம் மற்றும் மார்ச் 31, 2023ல் முடிவடைந்த ஆண்டில் ரூ. 619 லட்சம் ஒதுக்கியுள்ளது. REVL, இது தொடர்பான காப்பீட்டு கோரிக்கையைத் தொடங்கியுள்ளது. இது செயல்பாட்டில் உள்ளது. மார்ச் 31, 2024ல் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு, மதிப்பிடப்பட்ட நிகர பொறுப்பை ஈடுகட்ட போதுமானது என்று நிர்வாகம் கருதுகிறது.
c. மார்ச் 31, 2023 நிலவரப்படி, சந்தை நிலவரங்களில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் மூலதனச் செலவுகள் அதிகரித்து வருவதால், ஒரே பண உற்பத்தி அலகாக (CUG) பிரதிநிதித்துவப்படுத்தும் U.Sல் உள்ள முந்தைய ஸ்டெப்-டவுன் சப்சிடியரி ரானே லைட் மெட்டல் காஸ்டிங்ஸ் இன்க், ('LMCA')ன் நிகர சொத்துக்களின் மீட்டெடுக்கக்கூடிய தொகையை குழு மதிப்பீடு செய்துள்ளது. அத்தகைய மதிப்பீட்டின் அடிப்படையில், மார்ச் 31, 2023ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டில் அதன் தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதி முடிவுகளில் ரூ. 904 லட்சம் குறைபாடு கட்டணத்தை குழு விதிவிலக்கான பொருளாக பதிவு செய்துள்ளது.
ரானே (மெட்ராஸ்) லிமிடெட் ('RML') நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு மற்றும் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு இணங்க, ரானே மெட்ராஸ் இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் பி.வி. (நிறுவனத்தின் ஸ்டெப்-டவுன் சப்சிடியரி) செப்டம்பர் 14, 2023 அன்று LMCA (RML-ன் முந்தைய ஸ்டெப்-டவுன் சப்சிடியரி) அதன் முழு பங்குகளையும் USD 4.9 மில்லியனுக்கு விற்றுள்ளது. அதன்படி, மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டில், ஒரு விதிவிலக்கான பொருளாக தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதி முடிவுகளில், மேற்கூறிய RML-ன் முந்தைய ஸ்டெப்-டவுன் சப்சிடியரி ரூ. 8,546 லட்சமாக விற்றதில் குழுமம் நஷ்டத்தை பதிவு செய்துள்ளது.
LMCA-ன் விற்பனையின் விளைவாக, ரானே மெட்ராஸ் இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் பி.வி., RMLக்கு வழங்கப்பட்ட மாற்ற முடியாத மீட்டெடுக்கக்கூடிய விருப்பப் பங்குகளில் மூலதனத்தை குறைத்துள்ளது. அத்தகைய இழப்புகளிலிருந்து எழும் வரிச் சலுகையைப் பெறுவதற்குத் தகுதியுள்ளதாக RML தீர்மானித்துள்ளது, அதன்படி மார்ச் 31, 2024ல் முடிவடைந்த அண்டில் ரூ. 11,334 லட்சம் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தை பதிவு செய்துள்ளது. RML இந்த விஷயத்தில் சட்ட ஆலோசனையைப் பெற்றுள்ளது. மேலும், இந்த ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு போதுமான எதிர்கால வரிவிதிப்பு லாபம் கிடைக்கும் என்று நம்புகிறது.
RML முதன்மையாக ஒரு முறை உத்திரவாதம் தொடர்பான செலவுகள் மற்றும் VRS செலவுகள் மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டில் ரூ. 1,875 லட்சம், மற்றும் VRS செலவுகள் மார்ச் 31, 2023ல் முடிவடைந்த ஆண்டில் ரூ. 261 லட்சம்.
d. ரானே பிரேக் லைனிங் லிமிடெட் ('RBL'), REVL மற்றும் RML ஆகியவை முறையே INR 122 லட்சம், INR 120 லட்சம் மற்றும் INR 160 லட்சம் ஆகியவை முன்மொழியப்பட்ட குழு நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு திட்டத்திற்காக செலவழித்துள்ளன. மார்ச் 31, 2024ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதி முடிவுகளில் இது ஒரு விதிவிலக்கான உருப்படியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
3. இயக்குநர்கள் குழு, மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டிற்கான ஈக்விட்டி பங்கிற்கு ரூ. 25 ஈவுத்தொகையாகப் பரிந்துரைத்துள்ளது.
4. முக்கியமான தனித்த நிதிநிலை அறிக்கையின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன: ரூபாய் லட்சத்தில்

| வ. எண் | விவரங்கள் | காலாண்டிற்கான | | ஆண்டிற்கான | |
|---|---|---|---|---|---|
| | | மார்ச் 31, 2024 | மார்ச் 31, 2023 | மார்ச் 31, 2024 | மார்ச் 31, 2023 |
| | | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்பட்ட |
| 1. | மொத்த வருவாய் | 2,746 | 2,544 | 15,047 | 11,819 |
| 2. | வரிக்கு முன் லாபம் | 1,305 | 705 | 8,608 | 5,903 |
| 3. | வரிக்கு பின் லாபம் | 1,115 | 549 | 7,306 | 4,830 |
| 4. | மற்ற விரிவான வருமானம் | (553) | 120 | (730) | (24) |
| 5. | மொத்த விரிவான வருமானம் | 562 | 669 | 6,576 | 4,806 |

இடம் : சென்னை
தேதி : மே 15, 2024

ரானே ஹோல்டிங்ஸ் லிமிடெடிற்காக
எல். கணேஷ்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்